# மெட்ரோவில் இலவச, 'வைபை' முழு சினிமா பார்த்து ரசிக்கலாம்



சென்னை, நவ. 27–

சென்னை மெட்ரோ ரயிலில் இலவச, 'வைபை' வசதியில், பயணியர் சினிமா பார்க்க வசதி செய்யப்பட உள்ளது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இந்த ரயிலில், பயணியர் வசதியை அதிகரிக்க, மெட்ரோ நிர்வாகம் பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது.

மெட்ரோ ரயில் பாதையில், எழும்பூர் – சென்ட்ரல், டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மொபைல் போன் சிக்னல் கிடைக்கவில்லை.

இதனால், அதிருப்தியில் இருக்கும் பயணியரை சந்தோஷப்படுத்தும் வகையில், மெட்ரோ ரயில்கள் மற்றும் நிலையங்களில், மொபைல்போன் சிக்னல் வசதியுடன், இலவச வைபை சேவையும் வழங்கப்பட உள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

மெட்ரோ ரயிலில், தினமும், ஒரு லட்சம் பேருக்கு மேல் பயணிக்கின்றனர். இப்பாதையில், மொபைல்போன் சிக்னல் கிடைக்காத இடங்களில், விரைவில் சிக்னல் வசதி ஏற்படுத்தப்படும்.

இத்துடன், இலவச வைபை வசதியும் செய்யப்பட உள்ளது. 'ஸ்மார்ட் போன்' வைத்திருப்பவர்கள், இவ்வசதியை பயன்படுத்தி, தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னட மொழி படங்கள் மற்றும் பாடல்களை இலவசமாக பார்க்கலாம்.

இந்தியாவில், மெட்ரோ ரயில் போக்குவரத்தில், முதல் முறையாக சென்னை மெட்ரோவில் தான், இவ்வசதி அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இவ்வசதியில், ஒரு படத்தை, 5 நிமிடங்களில் பதிவிறக்கம் செய்யலாம். இவ்வசதியை, மெட்ரோ ரயில்கள் மற்றும் நிலையங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதற்கான பிரத்யேக செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இலவச வை பை வசதி மற்றும் படம் பார்க்கும் வசதி, டிசம்பர் அல்லது பொங்கல் பண்டிகையையொட்டி அறிமுகம் செய்ய ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு, அவர் கூறினார்.